## மார்ச்– 02 – சனி

### ஆண்டவரது பேரன்போ அவருக்கு அஞ்சுவோர் மீது என்றென்றும் இருக்கும்'' (தி.பா. 103:17)

**முதல் வாசகம் : சீராக்கின் ஞானம் 17 : 1 - 1 5**

ஆண்டவர் மனிதரை மண்ணால் படைத்தார் மீண்டும் அந்த மண்ணுக்கே திரும்புமாறு செய்கிறார்.அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலவரையை வகுத்தார் மண்ணுலகில் உள்ளவற்றின்மீது அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்.தமக்கு உள்ளதைப்போன்ற வலிமையை அவர்களுக்கு வழங்கினார் தமது சாயலாகவே அவர்களை உருவாக்கினார்.எல்லா உயிரினங்களும் மனிதருக்கு அஞ்சும்படி செய்தார் விலங்குகள், பறவைகள்மீது அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்.(தம் ஐந்தறிவைப் பயன்படுத்தும் உரிமையை ஆண்டவர் அவர்களுக்கு அளித்தார் ஆறாவதாகத் தம் அறிவுத்திறனில் பங்கு கொடுத்தார் அந்த ஆறறிவையும் விளக்கும் பகுத்தறிவை ஏழாவது கொடையாக வழங்கினார்.)

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சுவோர் மீது அவரது பேரன்பு நிலைத்திருக்கும்

**நற்செய்தி : மாற்கு 10 : 13 - 16**

சிறு பிள்ளைகளை இயேசு தொட வேண்டுமென்று அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டுவந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர். இயேசு இதைக் கண்டு, கோபம் கொண்டு, ”சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது.இறையாட்சியைச் சிறு பிள்ளையைப்போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். பிறகு அவர் அவர்களை அரவணைத்து, தம் கைகளை அவர்கள்மீது வைத்து ஆசி வழங்கினார்.

**தியானம்:** ஒவ்வொரு மனிதருடைய வாழ்வும் அவர்களுடைய குழந்தைப் பருவத்தை ஒத்ததாகவே இருக்கம். நல்ல பெற்றோர்களையும், நல்ல அனுபவங்களையும், நல்லவற்றை பார்த்தும், கேட்டும் வளார்திருந்தால் அவர்களது வாழ்வு சிறப்பானதாக மற்றவர்களுக்கு உகந்த வாழ்வாக இருக்கும். இல்லையெனில் அவர்கள் விரும்பத்தகாத வாழ்க்கை வாழ்பவர்களாகத்தான் இருப்பார்கள். குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்ற கடவுளின் வார்த்தை பெற்றோர்களுக்கு கொடுக்கப்படுகின்ற மிக முக்கியமான அறிவுரை. குழந்தைகள் சமூகத்திற்கு உகந்த மனிதர்களாக வளர்க்கப்பட வேண்டுமென்றால் முதலில் பெற்றோர்கள் முன்மாதிரிகையான வாழ்க்கை வாழ்பவர்களாக இருக்க வேண்டும். நற்செய்தியில் இயேசு குறிப்பிடும் சிறு பிள்ளைகள் யார்?. குழந்தை உள்ளம் கொண்டவர்கள் அனைவருமே. எளிமை, கபடற்ற தன்மை. மனத் தூய்மை, மன்னிக்கும் மனப்பாங்கு, உண்மை பேசும் பண்பு முதலான இறையாட்சிப் பண்புகளுக்கு சொந்தக்காரர் அனைவரும் குழந்தைகளே. நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகளே எனினும் சிறு பிள்ளைகள் போல் மேற்சொன்ன உயர் நெறிகளை வாழ்ந்த காட்டும் பொழுது நாமும் இறைவனின் செல்லப் பிள்ளைகளே, இறையாட்சி நமக்கு உரிமையாகும்.